R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
July 2020



கொரோனா காலத்தில்
துப்புறவு பணியாளர்களின்
சிறப்பான சேவை



கொரோனா கால சிந்தனை!
தனிமனித
இடைவெளியோடு...

Cell : 94435 58041
6379350509
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

Every Tuesday 6.00 P.M on Tamilan TV &
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 20 ஜூலை 2020 கனி 8

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலே செயர் 3:16

THE WORD OF CHRIST

ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்;
அவைகளால் உங்களுக்கு
நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச்
சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 8
தலைப்பு : பலி - Sacrifice
வேத வாசிப்பு : எபிரெயர் 10

"உலகத்தில்
நீங்கள் இருக்கலாம்,
ஆனால்
உலகம்
உங்களுக்குள்
இருக்கக்கூடாது"

1. யாக்கோபு மலையின்மேல் - ஆதி.31:54
2. மோசே: கர்த்தருக்குப் - யாத்.10:24,25
3. சாலமோன் மேடைகளில் பலி - 1இரா.3:33
4. பலியினாலே என்னோடே உடன்படி - சங்.50:5
5. பலியை நீர் விரும்புகிறதில்லை - சங்.51:16,17
எனவே (எ.கா) பலியிடுவதைப்பார்க்கிலும் - நீதி.21:3
6. உங்கள் பலிகளின் திறள் எனக்கு - ஏசா.1:11
7. பலியையல்ல இரக்கத்தையே விரும்பு - மத்.12:6,7
8 நீங்கள் உங்கள் சரீரங்களை ஜீவபலியாக - ரோம.12:1
9. கிறிஸ்து நமக்காக பலியாக ஒப்புக் - எபே.5:2
10. வேறொரு பலி இனி இல்லை - எபி.10:26,27





**the word of christ** இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும்
**YouTube** வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்
YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509









**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


திு வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டிஎண்: 239

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. யாருக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று சுவிசேஷமாய் முன்னறிவித்தது?
2. அர்த்தசஷ்டா என்னும் ராஜாவினால் பரலோகத்தின் தேவனுடைய நியாயப் பிரமாணத்தைப் போதிக்கும் வேதபாரகன் என்று எழுதப்பட்ட ஆசாரியன் யார்?
3. ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எப்படியிருக்கவேண்டும்?
4. நொவதியாள் என்னும் தீர்க்கதரிசியானவள் யாருடைய நாட்களில் இருந்தாள்?
5. வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது, எப்படியாவது, கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார் அதனால் சந்தோஷப்படுகிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?
6. மொர்தெகாய் இடத்திலே வளரும்போது அவன் சொற்கேட்டு நடந்ததுபோல, அரமனையிலும் அவன் சொற்கேட்டு நடந்த ஸ்திரீ யார்?
7. லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் அது எவர்களின் பாரம்பரியம்?
8. யாருடைய நாட்களில் தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது, சாத்தானும் அவர்கள் நடுவிலே வந்து நின்றான்?
9. தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
10. நல்ல மனுஷனுடைய நடைகள் எவரால் உறுதிப்படும்?

## வேதாகம ஆய்வு... 24



ஆமோஸ் - Amos

1. சுமைதாங்குகிறவன்
2. தெக்கோவா ஊரான், காட்டத்திப் பழங்களைப் பொறுக்குகிறவன் – ஆமோ.7:14
3. கர்த்தர் இவனை அழைத்து தீர்க்கதரிசனம் சொல்லச் சொன்னார் – ஆமோ.7:15
4. கர்த்தருடைய வசனம் கேட்க கிடையாத பஞ்சம் வரும் என்று சொன்னவன் இவனே – ஆமோ.8:11
5. இயேசுவின் வம்சவரலாறு அட்டவணையில் இடம் பெறுகிறான் – லூக்.3:25

சிறுவர் பகுதி

## இரண்டுவிசை தரிசனம்

வேத பகுதி: 1இராஜாக்கள் 11:9



**அ**ன்பான தம்பி தங்கைகளே சாலொமோன் ராஜாவை நீங்கள் கேள்விப்பட்டு இருக்கிறீர்களா? அவர்தான் எருசலேமின் தேவாலயத்தைக் கட்டினார். அவர் இந்த ஆலயத்தை 7 வருஷத்தில் கட்டிமுடித்தார். அவர் எருசலேமிலே இஸ்ரவேலையெல்லாம் 40 வருஷம் அரசாண்டார். 13 வருஷத்தில் அரண்மனையையும் கட்டிமுடித்தார். 3000 நீதிமொழிகளையும், 1005 பாட்டுகளையும் எழுதினார். அவருக்கு பிரபுக்கள் குலமான எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள்.

ஆனால், சாலொமோன் வயது சென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை. சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான். சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டுவிசை தரிசனமாகி, அந்நியதேவர்களைப் பின்பற்றவேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தும் அவன் கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி, அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமற்போனதினால், கர்த்தர் அவன்மேல் கோபமானார். அன்பான பிள்ளைகளே, இந்த சாலொமோனை கர்த்தர் இப்படி எச்சரித்திருந்தும் வழிவிலகிபோனான். இவனுக்கு அதிகமான ஞானத்தைக் கொடுத்து, அத்தோடு செல்வத்தையும் கொடுத்திருந்தார். இவனோ ஒன்றுக்கும் உதவாத விக்கிரகத்தை பின் பற்றி சோரம்போனான். நீங்களும் இவனைப்போல போய்விடாதபடி கர்த்தருக்குள் உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

**மனப்பாட வசனம்**

“என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்”

( யாத்திராகமம் 20:3 )


‘ தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் ’ மாத இதழை ஒவ்வொரு மாதமும்
10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509
என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்





# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 20 ஜூலை -2020 கனி - 8


ஆசிரியருரை

## கர்த்தரைச் சார்ந்துகொண்ட யூதபுத்திரர்

The Children of Judah Relied On the Lord God



**சா**லொமோனுக்குப் பின்பு ராஜ்யபாரம் இரண்டாக பிரிந்து அதில் யூத ராஜ்யத்திற்கு சாலொமோனின் குமாரன் ரெகொபெயாம் ராஜாவானான். இஸ்ரவேலின் ராஜ்யத்திற்கு யெரொபெயாம் ராஜாவானான். இவர்கள் இருவருக்கும் அவர்கள் இருந்த நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்துகொண்டிருந்தது. இதில் யூத புத்திரர்கள் கர்த்தரை சார்ந்துகொண்டார்கள். அப்பொழுது அபியா யூதாவின்மேல் ராஜாவாக இருந்தான். "அபியா தெரிந்துகொள்ளப்பட்ட நாலுலட்சம்பேராகிய பராக்கிரம சேவகரின் இராணுவத்தாரை யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணினான்; யெரொபெயாம் தெரிந்துகொள்ளப்பட்ட எட்டுலட்சம்பேராகிய பலத்த பராக்கிரமசாலிகளை அவனுக்கு எதிராக யுத்தத்திற்கு நிறுத்தினான்" (2நாளா.13:3). யூதாவின் மக்கள் 4லட்சம், இஸ்ரவேலிலோ 8லட்சம் இரட்டிப்பாக இருக்கிறது. இதைக்கண்டு யூதாவின் ராஜா சோர்ந்துபோகவில்லை. அவன் கர்த்தரை நம்பினபடியால் அவர்களுக்கு ஒரு போதனையைக் கொடுக்க ஆரம்பித்தான். தாவீது சவுலின் மீது கைபோட யோசித்தான். ஏனென்றால் அவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்ற ஒரே காரணத்திற்காக சவுலின்மீது கைபோட தயங்கினான். அதைப்போல இஸ்ரவேலும் தேவனுடைய ஜனங்களே பிரிந்துபோய்விட்டார்கள் என்ற ஒரே காரணத்தை மனதில் கொண்டு, யூதாவின் ராஜாவாகிய அபியா அவர்களுக்கு ஒரு போதனையைக் கொடுத்தான்.

அப்போதனையென்னவென்றால்; "...அபியா எப்பிராயீம் மலைத்தேசத்திலுள்ள செமராயீம் என்னும் மலையின்மேல் ஏறிநின்று; யெரொபெயாமே எல்லா இஸ்ரவேலரே கேளுங்கள். இஸ்ரவேலை என்றைக்கும் ஆளும் ராஜ்யபாரத்தை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் மாறாத உடன்படிக்கையாய் கட்டளையிட்டதை நீங்கள் அறியீர்களா?...இதோ, தேவன் எங்கள் சேனாதிபதியாய் எங்களோடேகூட இருக்கிறார்; உங்களுக்கு விரோதமாகப் பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்குகிற ஆசாரியர்களும் இருக்கிறார்கள்; இஸ்ரவேல் புத்திரரே, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக யுத்தஞ்செய்யாதேயுங்கள்; செய்தால் உங்களுக்குச் சித்திக்காது என்றான்" (2நாளா.13:4-12). யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பு ஒரு நல்ல ஆலோசனையை அபியா ராஜா இஸரவேலுக்கும் அதின் ராஜாவுக்கும் கொடுத்தான். ஆண்டவர் இயேசு நமக்கும் இவ்விதமே

கற்றுக்கொடுத்திருக்கிறார். ஒருவன் உனக்கு எதிராக செயல்பட்டால் அவன் தனித்திருக்கும்போது அவனுக்கு அவன் குற்றத்தை உணர்த்து, அவன் மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பினால் அவனை நீ ஆதாயம் செய்துகொள்வாய் என்றார். அந்த விதமாக இந்த அபியா செய்தான். அவர்களோ யுத்தத்திற்கு ஆயத்தமானார்கள் யெரொபெயாம் 18 வருட அனுபவமுள்ளவன் அவர்களுக்குப் பின்னாக வரத்தக்கதாக ஒரு பதிவிடையைச் சுற்றிப்போகப்பண்ணினான்; அப்படியே அவர்கள் யூதாவுக்கு முன் இருந்தார்கள்; அந்தப் பதிவிடை அவர்களுக்குப்பின் இருந்தது. இதை அறிந்த "யூதா ஜனங்கள் திரும்பிப்பார்க்கிறபோது, முன்னும் பின்னும் யுத்தம் நடக்கிறதைக் கண்டு, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; ஆசாரியர்கள் பூரிகைகளை முழக்கினார்கள். யூதா மனுஷர் ஆர்ப்பரித்தார்கள்; யூதா மனுஷர் ஆர்ப்பரிக்கிறபோது, தேவன் யெரொபெயாமையும் இஸ்ரவேலனைத்தையும் அபியாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறியஅடித்தார். இஸ்ரவேல் புத்திரர் யூதாவுக்கு முன்பாக முறிந்தோடினார்கள்; தேவன் அவர்களை இவர்கள் கையில் ஒப்புக்கொடுத்தார்" (2நாளா.13:14-16). யூதா ஜனங்கள் கொஞ்சப்பேராக இருந்தாலும் அவர்கள் யுத்தத்தில் தேவனை நோக்கி கூப்பிட்டார்கள் என்று பார்க்கிறோம். இவர்களுடைய ஜெபத்தைக் கேட்ட கர்த்தர் இவர்களுக்காக யுத்தம் செய்தார். கொஞ்சப்பேராக இருந்த யூதாவுக்கு முன்பாக இஸ்ரவேலர் முறிந்தோடிப்போனார்கள். யுத்தம் கர்த்தருடையதாக இருந்தது. தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதமாக எழும்புகிறவர்கள் இந்தவிதமாக முறிந்தோடிப்போவார்கள். ஆண்டவர் இயேசு சொல்லும்போது; உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால், பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள். ஆகையால் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தலையிலே விழாது என்றார். தேவன், அந்த அளவு தம்மை நேசிக்கிறவர்கள் மீது கரிசனையுள்ளவராயிருக்கிறார்.

யூதா ஜனங்கள் கர்த்தருடைய கற்பனையின்படி நடக்கிறவர்களாக இருந்தார்கள். இஸ்ரவேலோ யுத்தத்திற்கு எத்தனித்தார்கள் கர்த்தருடைய வார்த்தையை புறம்பாக்கிப்போட்டார்கள். அபியாவின் ஆலோசனைக்கு செவிகொடாமற்போனார்கள். தேவனுடைய வார்த்தைகளை புறக்கணிக்கிறவர்களை தேவனும் புறக்கணித்துப்போடுவார். ஆகையால், "அபியாவும் அவனுடைய ஜனங்களும் அவர்களில் மகா சங்காரம்பண்ணினார்கள்; தெரிந்துகொள்ளப்பட்ட ஐந்துலட்சம்பேர் இஸ்ரவேலிலே வெட்டுண்டு விழுந்தார்கள்" (2நாளா.13:17). இந்த ஐந்துலட்சம்பேரும் அபியாவின் வார்த்தைக்குச் செவிகொடுத்திருப்பார்களேயானால் இவர்கள் மரணத்தை சந்தித்திருக்கமாட்டார்கள். அநேகர் தங்களுடைய சிந்தனைகளினாலே வீணராய் போய்விடுகிறார்கள். தேவன் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களோடு இருக்கிறார். அவர்கள் செய்வதை வாய்க்கப் பண்ணுகிறார். இன்றைக்கு கர்த்தருடைய நாமத்தை மட்டும் தரித்துக்கொண்டு அநேகர் இஸ்ரவேல் மக்களைப்போல பிரிந்துபோய் இருக்கிறார்கள். இவர்கள் கர்த்தர் தாம் தெரிந்துகொண்ட சபையை அடையாளம் கண்டுகொண்டு மனந்திரும்பவேண்டும். இல்லையேல் இஸ்ரவேல் மக்களைப்போல அழிந்துபோவார்கள். தேவன் தமது சித்தத்தை தாம் தெரிந்துகொண்ட ஜனங்கள் மத்தியில் நிறைவேற்றுகிறார். ஆபிரகாம் என்ற தேவமனிதனைத் தெரிந்துகொண்டு



வாக்குப்பண்ணவில்லை. ஆனால் 'தேவன் நம்மோடிருப்பதாக' (மத். 1:23) வாக்குப்பண்ணியுள்ளார். இந்த ஆசீர்வாதம் பெரிதல்லவா? அவர் இந்த பூமியிலே நம்மோடிருப்பாரானால், மறுமையில் மேலான இடத்தில் அவரோடுகூட நாம் இருக்கப்போவது அதிக நிச்சயமல்லவா? அன்பு சகோதரியே வரப்போகிற மேலான ஆசீர்வாதத்தை நினைத்து நம்முடைய பழைய செய்கைகளைக் களைந்து போடுவோமாக!

மேலும் மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட **புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்"** (எபே.4:24) ஆம். எவ்வாறு புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுவது? மெய்யான அதாவது உண்மையான நீதியிலும், பரிசுத்தத்திலும் நம்மை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் மாறும்போது புதிய மனுஷனைத் தரித்துகொள்கிறோம். அதாவது ஆதாமின் கீழ் பாவத்திற்குட்பட்ட நம்முடைய பழைய மனுஷன் அவரோடுகூடச் (இயேசுவோடுகூட) சிலுவையில் அறையப்படும் போது புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வோம். பவுல் இதனையே "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனிநான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்..." (கலா. 2:20) என்கிறார். ஏனெனில் "அவரே (இயேசுவே) தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்."(1கொரி.1:31) இப்படியாக நீதியும் பரிசுத்தமுமாயிருக்கிற இயேசுவைத் தரித்துக்கொள்ளும்போது கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நமக்குள்ளும் குடிகொள்ள ஆரம்பிக்கிறது. இப்படியாக நாம் புதிய மனுஷனைத் தரித்துக்கொள்கிறோம்.

அன்பான சகோதரியே, இதுவே தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற ஒன்றாகும். வீழ்ந்துபோன ஆதாமின் பாவசுபாவத்திலிருந்து நம்முடைய மனதையும், நம்முடைய செய்கைகளையும் களைந்து போட்டு புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வோம். மீண்டும் ஏதேனின் (The Happy Place) வாழ்விற்கு திரும்ப, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தமே பரிகாரமாயிருப்பதினால் அவரை விசுவாசித்து, அவரே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்போது பரிசுத்தஆவியின் வரத்தைப்பெற்று புதிய மனுஷியாக மாறுவீர்கள். பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோம். எல்லாம் புதிதாகும். அப்போது கர்த்தர் தம்முடைய சபையிலே உங்களை சேர்த்து. போஷித்துக் காப்பாற்றுவார். அவருடைய மந்தையில் சேர்ந்து உள்ளும் புறம்பும் மேய்ச்சலைக் கண்டு நித்திய ஆசீர்வாதம் பெற கர்த்தர் தாமே உதவிசெய்வார!

**நடப்புச்செய்திகள்**

- ❒ மருத்துவமனையின் அனைத்து வார்டுகளிலும் சிசிடிவி.
- ❒ கீழடியில் கண்டுபிடிக்கப்படும் மனித எலும்புக்கூடுகளும் முதுமக்கள் தாளியும்
- ❒ வீரதீரசெயலுக்கு 5 போலீசாருக்கு ரூ 5 லட்சத்துடன் விருது.
- ❒ மின் வாகன மையமாக மாறும் இந்தியா: நிதின் கட்காரி நம்பிக்கை.
- ❒ 2020 மின் திருத்த சட்டத்தை வாபஸ் பெறவேண்டும் என்ற கோரிக்கை.

புறங்கூறுதல், கோள்ச்சொல்லுதல், சுயநலம், இன்னும் இது போன்ற அநேக காரியங்களை நம்மிலிருந்து அப்புறப்படுத்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நம் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுமாத்திரமல்ல, நம்முடைய இப்பேர்பட்ட பாவங்கள் மன்னிக்கப்பட்டு உள்ளத்தில் புதிதான ஆவியினை பெற ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும். அப் 2:38 ''நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' என்கிறது. அப்படியானால் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் உள்ளத்திலே பரிசுத்த ஆவியாகிய அந்த புதிதான ஆவியுள்ளவர்களாக மாறுவோம். அப்போது பழையவைகள் ஒழிந்துபோகும். இவ்வாறாக நம்முடைய மனம் புதிதாகி நாம் நம்முடைய பழைய பாவநிலையிலிருந்து மாறி மறுரூபமடைவோம்.

இதையே கொலோசெயர் 3:8-9ம் கூட ''இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும் உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; **பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு,''** என வலியுறுத்துகிறது. மேற்கூறப்பட்டுள்ள இத்தகைய செய்கைகள் நம்மிடம் இருக்கின்றனவா? அப்படியிருக்குமானால் அவைகளை களைந்து போட இப்போதே முயற்சிப்போம். கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளை சுதந்தரித்துக்கொள்ள நாம் அழைக்கப்பட்டுள்ளோம். பூமிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற அநேகர் அடித்துக்கொள்ளுகின்றனர். ஓயாது தங்களுடைய மேன்மையையே நாடி மற்றவர்களையும் காயப்படுத்தவோ அல்லது பிறருக்குத் தீமைசெய்யவோ துணிகின்றனர்.

அன்பு சகோதரியே, இழிவான ஆதாயத்தை நாடிப் போவாயானால், தேவனுடைய வலது பாரிசத்திலுள்ள மேலானவைகளை எப்படி பெற்றுக்கொள்ளுவாய்? கிறிஸ்துவுக்குப் பிரியமில்லாத உங்களுடைய செய்கைகளினால் மேலான ஆசீர்வாதத்தை இழந்துவிடாதீர். லோத்தின் மனைவி அன்று பூமிக்குரியவைகளைத் திரும்பிப்பார்த்து உப்புத்தூணாகி மேலான காரியத்தை இழந்தாள். ஒருவேளை வரக்கூடிய பிரச்சனைகளின் அழுத்தத்தினாலும், பாரத்தினாலும் கிறிஸ்துவுக்குப் பிரியமான செய்கைகளை என்னால் செய்யமுடிகிறதில்லை. கர்த்தரை நம்பி இத்தனை நாட்களாக என் துன்பமும் துயரமும் எங்கே ஒழிந்தன, விரும்பாத காரியங்களே என் வாழ்வில் நடக்கிறது, அநேக இழப்புகளையும், வியாதிகளையுமே அனுபவிக்கிறேன் என்று அங்கலாய்த்துக்கொண்டிருக்கிறீர்களா? அன்று நகோமி தன்னுடைய புருஷனையும், தன்னுடைய குமாரர்களையும் இழந்தாள். நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர் என்னை சிறுமைப்படுத்தி, சர்வவல்லவர் என்னை கிலேசப்படுத்தியிருக்கையில்'' என்று அங்கலாய்த்துக் கொண்டாள் (ரூத்.1:21). அன்புசகோதரியே, நாம் கர்த்தரை ஏற்றுக்கொண்டவுடனே, கர்த்தர் எல்லாவித உலக ஆசீர்வாதங்களையும் குறைவில்லாமல் தருவேன் என நமக்கு



அவனுடைய சந்ததியில் கிறிஸ்துவை பிறக்கச்செய்தார். அவரே நம்மை நித்தியமானவருக்கு நேரே வழிநடத்தக்கூடியவராயிருக்கிறார். என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்றார். ஆம், அன்பானவர்களே இயேசுவை அல்லாமல் நாம் பிதாவை சந்திக்கமுடியாது. பிதாவானவர் இயேசுவை உலகத்தில் தெரிந்துகொண்டு, பூர்வ உலகத்தையும் இரட்சிக்க திட்டம்கொண்டார்.

இந்த யூதா ஜனங்கள் இஸ்ரவேலை மேற்கொண்டதற்கான காரணம்; அவர்கள் தேவனை நோக்கி ஜெபித்தார்கள் என்று தியானித்தோம். மேலும், "அப்படியே இஸ்ரவேல் புத்திரர் அக்காலத்திலே தாழ்த்தப்பட்டார்கள்; யூதா புத்திரரோ தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைச் சார்ந்துகொண்டதினால் மேற்கொண்டார்கள். அபியா யெரொபெயாமைப் பின்தொடர்ந்து, அவனுக்கு உண்டான பட்டணங்களாகிய பெத்தேலையும் அதின் கிராமங்களையும், எஷானாவையும் அதின் கிராமங்களையும், எப்பெரோனையும் அதின் கிராமங்களையும் பிடித்தான்" (2நாளா.13:18,19). யூதா ஜனங்கள் கர்த்தரை நோக்கி ஜெபித்தது மட்டுமல்லாமல் அவர்கள் கர்த்தரை சார்ந்துகொண்டார்கள். சார்ந்துகொள்ளுவது என்பது அவரோடு ஒருமித்திருப்பது. அவர் என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்வது தங்களுடைய சுய எண்ணத்தை தூக்கிஎறிந்து விட்டு கர்த்தருடைய ஆலோசனையின்படி நடப்பது. அநேகர் கர்த்தரை சார்ந்துகொள்ளாமல் தங்களுடைய சுயஎண்ணத்தில் பிடிவாதமாக இருந்துகொண்டு கெட்டுப்போகிறதை நாம் காண்கிறோம். பிசாசு ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டு நம்மை மோசம்போக்கிவிடுவான் என்பதை நாம் முதலாவது அறிந்துகொள்ளவேண்டும். யூதாவும் இஸ்ரவேலும் கர்த்தருடைய ஜனங்கள்தான் இதில் யூதாவில் இருக்கிறவர்களாக இருந்தாலும் இஸ்ரவேலில் இருக்கிறவர்களாக இருந்தாலும் நாம் கர்த்தரைத்தானே ஆராதித்து வருகிறோம் என்று சொல்லியிருப்பார்கள். ஆனால் இந்த இரு கூட்டத்தாரில் கர்த்தர் தெரிந்துகொண்ட கூட்டம் எது? எந்த கூட்டத்தார் கர்த்தருடைய சித்தத்தை செய்தார்கள் என்று நாம் பார்க்கும்போது யூதாவின் ஜனங்கள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றினார்கள். அதை தேவன் தெரிந்துகொண்டார். ஏனெனில் அவர்கள் தாவீதின் வழியில் வந்தவர்கள். இஸ்ரவேலில் யெரொபெயாமோ தன்இச்சையில் வந்தவன். தேவனுடைய வார்த்தைகளைப் புறம்பாக்கிப் போட்டவன். அவனை அநேகர் சார்ந்திருந்தபோதும் இறுதியில் அவர்களை யுத்தத்தில் அழிந்துபோகும்படியாக கர்த்தர் ஒப்புக்கொடுத்தார் எனக் காண்கிறோம்.

அவனுடைய முடிவை நாம் பார்க்கும்போது; "அப்புறம் அபியாவின் நாட்களில் யெரொபெயாம் பலங்கொள்ளமாட்டாதேபோய், கர்த்தர் அவனை அடித்ததினால் மரணமடைந்தான்" (2நாளா.13:20). கர்த்தர் ஒருவனை அடிக்கிறார் என்றால் அவன் எந்த அளவு தேவனுக்கு விரோதமாக செயல்பட்டிருப்பான் என்பதை எண்ணிப்பாருங்கள். தேவன் அடித்த நபர்களை ஒருசில இடங்களில் மட்டுமே நாம் வேதத்தில் படிக்கிறோம். அதில் யெரொபெயாமும் ஒருவன். தேவனுக்கு விரோதமான செயலில் ஒருவன் ஈடுபடும்போது அல்லது மேட்டிமை கொள்ளும்போது தேவனால் அவன் அடிக்கப்படுகிறான். தேவன் அடித்தால் அவருடைய அடி எப்படியிருக்கும் மீண்டும் எழாதபடி அடிப்பார். அவருடைய அடி மரண அடியாயிருக்கும். அந்தப்படியாக யெரொபெயாமை கர்த்தர் அடித்ததினால் அவன் மரணமடைந்தான். புதிய ஏற்பாட்டில் இப்படி அடிபட்ட ஏரோதைப்பற்றி நாம் வேதத்தில் படிக்கிறோம். இவனும் கர்த்தரால் அடிக்கப்பட்டு மரணமடைந்தான்.

"குறித்தநாளிலே ஏரோது ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினான். அப்பொழுது ஜனங்கள் இது மனுஷசத்தமல்ல, இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுபுழுத்து இறந்தான்" (அப்.12:21-23). பின்பு என்ன நடந்தது. தேவவசனம் வளர்ந்து பெருகிற்று என்று வாசிக்கிறோம். அப்படியானால் இவன் இருக்கும் வரை வசனத்திற்கு தடையாக இருந்திருக்கிறான். இவனுடைய மரணத்திற்கு பின்பு தேவனுடைய வசனம் வளர்ந்து பெருகிற்று. எவன் ஒருவன் கர்த்தருடைய பணிக்கு தடையாயிருப்பானோ அவனை கர்த்தர், காலம் வரும்போது அடித்துபோடுகிறார்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, கர்த்தரை சார்ந்துகொண்ட யூதா புத்திரரைக்குறித்து இன்றைய நாள் செய்திவேளையில் தியானித்தோம். தேவன் அவர்களோடு இருந்து யுத்தம் பண்ணினார். தங்களிலிருந்து பிரிந்துபோன இஸ்ரவேலுக்கு நல்ல பாடம் புகட்டினார். ஆகையால் தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல் குற்றம்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர் என்பதை புரிந்துகொண்டு தேவனுடைய ஜனங்களோடு தேவனை ஆராதிக்க முயற்சியுங்கள். மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரிய சபைகளை விட்டு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால் புதிய யுகத்தில், புதிய ஏற்பாட்டு காலத்தில் துவங்கப்பட்ட கர்த்தருடைய சபையை அடையாளம் கண்டு கொண்டு அதில் உங்களை இணைத்துக்கொள்ளுங்கள் அந்த சபையை கர்த்தர் பரலோகத்தில் உள்ள பிதாவிடம் ஒப்புக்கொடுக்க அதாவது அந்த ராஜ்யமாகிய சபையை ஒப்புக்கொடுக்க இதோ, சீக்கிரம் வருகிறேன் என்கிறார். அவருடைய வருகைக்குள்ளாக நீங்கள் தேவன் தெரிந்துகொண்ட ஜனங்களோடு உங்களை இணைத்துக்கொள்ளுங்கள். மற்றபடி உங்களுடைய விசுவாசம் நம்பிக்கை எல்லாம் வீணாய்போய்விடும்.

**யூதா ஜனங்களில் இறுதியாக வந்த இராஜா இயேசுவா?**

ஆம், இயேசு இராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். "பிலாத்து அவரை நோக்கி: நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்" (யோவா.18:37). இயேசு பரலோகராஜ்யத்தின் ராஜாவாக இன்றும் வீற்றிருந்து ஆளுகை செய்கிறார். அவர் கர்த்தருடைய சபையின் தலைவராயிருக்கிறார். அவரை தேவன் தெரிந்துகொண்டார். இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தார். ஆகையால் இவருக்குச் செவிகொடுக்கவேண்டும். சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார். நீங்கள் சத்தியத்தை அறியக்கூடிய ஜனங்களாக இருப்பீர்கள் என்றால் இவருக்குச் செவிகொடுத்து இவர் ஏற்படுத்தின மந்தையில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும் என்ற வசனத்தின்படி இன்று ஒரே மந்தை இருக்கிறது. ஒரே மேய்ப்பனாகிய இயேசு இருக்கிறார். இவரே உலகத்தில் தேவனால் அனுப்பப்பட்டவர் பாவத்தைப்போக்கும் தேவ ஆட்டுக்குட்டி. இவருடைய இரத்தம் சிந்துதலினாலே பாவமன்னிப்பு உண்டாயிருக்கிறது. ஆகையால் அன்பானவர்களே, ஆண்டவருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்து உங்களுடைய பாவங்கள்போக கழுவப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



பெண்கள் பகுதி

## எல்லாம் புதிதாயின
## All things have become new

-Glory Arjunan



**அ**ன்பு சகோதரியே, எல்லாம் புதிதாயின! இவ்வசனத்தை அடிக்கடி வாசித்திருப்போம். சில வேளைகளில் பிரசங்கத்திலும் கேட்டிருப்போம். நாமும்கூட எல்லாம் புதிதாகவேண்டும், பழைய பாடுகள். பிரச்சனைகள், தோல்விகள், நோய்கள் எல்லாமே நம்மை விட்டு அகல வேண்டுமென விரும்புகிறோம். ஆனால் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் அந்த புதியவைகள் எவைகள் என நாம் அறிந்துகொள்வது இக்கடைசி காலத்திலுள்ள நமக்கு மிகவும் அவசியமென நினைக்கிறேன்.

ஆவியானவர் பவுலின் மூலம், **"..உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்"** (ரோம.12:2) என திருவுளம்பற்றுகிறார். ஆம், நம் மனம் மறுரூபமாக வேண்டும். மறுரூபம் என்றால் என்ன? ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாற்றமடைவது. அதாவது பழைய நிலையிலிருந்து புதியநிலைக்கு மாற்றமடைவது. அப்படியானால் மனதளவில் நம்முடைய நிலை என்ன என்பதை தேவனுடைய வார்த்தையின் துணை கொண்டு அறிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் நம்முடைய உள்ளிந்திரியங்களை தேவன் ஒருவரே அறிவார். நம்முடைய இருதயம் செம்மையாக இருக்கிறதா? அல்லது திருக்குள்ளதாயிருக்கிறதா? என்பதையும் அவர் அறிவார். அவருடைய கண்களுக்குமுன் ஒன்றும் மறைவானதில்லை என வேதம் கூறுகிறது.

அன்பு சகோதரியே, இன்றைய நாட்களில் எங்கும் மாய்மாலம் பெருகியுள்ளது. அநேகர் தங்கள் உதடுகளினால் இனிமையாகப் பேசுவர், ஆனால் தங்கள் உள்ளத்திலோ வஞ்சகம் அல்லது கபடு நிறைந்து காணப்படும். ஆனால் நாமோ மிகவும் ஞானமுள்ளவர்களாய் நடந்துகொள்ள வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது புறம்பே இருக்கிறவர்களுக்கு முன்பாக மிக ஞானமுள்ளவர்களாக நடக்கவேண்டும். வேதமும் அவ்வாறே கூறுகிறது "புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" என (கொலோ. 4:5) போதிக்கிறது. ஒருவேளை நாமே, கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது புறம்பேயிருக்கிறவர்களைப் போல் மாய்மாலம் பண்ணிக்கொண்டு வாழ்வோமென்றால் முதலாவது நாம் நம்மை சரிசெய்து கொள்ள வேண்டும். நம்முடைய மனம் பலவிதமான பாவங்கள் நிறைந்து பழைய ஆதாமின் நிலையிலிருக்குமானால் நம் மனம் புதிதாக வேண்டியது அவசியம் "உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி," (எபேசி.4:23) என வேதம் கூறுகிறது. பழைய ஜென்ம சுபாவங்களாகிய கோபம், மேட்டிமை, பொய், அசுத்தம்,

காட்டுகளைக் கொண்டிருந்தனர்: **ஓய்வுநாள்தோறும்** கர்த்தருடைய சந்நிதியில் அடுக்கிவைக்கப்படும் நித்திய உடன்படிக்கைக்குரிய அப்பம் (லேவி.24:5-9) மற்றும் **வருடந்தோறும்** கைக்கொள்ளவேண்டியிருந்த பஸ்காவாகிய அப்பம். இன்று கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கைவைத்துள்ள பிரிவினை சபை அங்கத்தினர்கள் அவருடைய நினைவுகூருதலில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வருடத்திற்கொருமுறை பங்குகொள்கின்றனர், மேலும் புளிப்பில்லா அப்பத்திற்கும் திராட்ச ரசத்திற்கும் பதிலாக மற்ற பொருட்களை வைப்பது அசாதாரணமாக இருப்பதில்லை.

ஆனால் பழைய ஏற்பாட்டு கட்டளையின் கீழ் அடிக்கடி வருகின்ற அவர்களுடைய விருந்து அல்லது அவர்களோடு சம்பந்தப்பட்டிருந்த பொருட்கள் போன்றவற்றினிடையே தொந்தரவு ஏற்பட்டிருக்கவில்லை. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தேவன் தம்முடைய குமாரனின் நினைவுகூருதலை எத்தனை முறை கடைப்பிடிக்க விரும்புகின்றார் என்பதைப்பற்றிய அவர்களுடைய புரிந்துகொள்ளுதலில் மிகத் தெளிவாக இருந்தனர். மேலும் அவர்கள் அவருடைய சரீரத்தையும் அவருடைய இரத்தத்தையும் குறிக்கும் மாதிரிகள் எவை என்பதையும் தெளிவாக அறிந்திருந்தனர்.

இன்று உண்மைக் கிறிஸ்தவர்கள் இதே மாதிரியையே பின்பற்றுகின்றனர். ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவருவதில் அவர்களுடைய நோக்கம், அப்பம் பிட்குதலிலும் பானம்பண்ணுதலிலும் பங்கெடுப்பதாகவே இருக்கிறது (1கொரி.11:24-26).

(3) “எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, ..... அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், ..... தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்” (1கொரி.11:28,26).

(4) “என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; ....” (யோவா.6:54).

(5) “ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்” (யோவா.6:57)

இந்த விருந்தை சாதாரணமான ஒரு “சடங்காக” நினைப்பவர்கள் தவறிழைக்கின்றனர். இயேசு மிகுந்த ஆழமான கருத்துடனே நிதானமாக பொருட்களை தெரிவுசெய்தார் அத்தோடு இதில் பங்குகொள்ளுகிறவர்கள் இதன் பொருள் தங்களுக்குரியதென புரிந்துகொள்வது அவர்களுடைய பொறுப்பாகவுமிருக்கிறது.


நம்முடைய ஆவிக்குரிய ஜீவியமே இந்த ஒழுங்கான நினைவுகூருதலில் பங்குகொள்வதில் தான் கட்டப்பட்டுள்ளது. **நாம் ஜீவிக்கின்றோம், ஏனென்றால் நமக்கு ஜீவன் கொடுக்கும்படி அவர் மரித்தார், ஏனென்றால் நம்மில் அவர் ஜீவிக்கிறார்.**

ஜெபியுங்கள்

- கொரோனா தொற்றிலிருந்து ஜனங்கள் காக்கப்பட...
- உலகத்தில் மனித நேயம்அதிகரிக்க...
- நாட்டின் தலைவர்களுக்காக...
- அனைத்து மருத்துவமனை செவிலியருக்காக...
- அனைத்து மாநகராட்சி ஊழியர்களுக்காக...
- விவசாயிகளுக்காக...
- குறிப்பாக அனைத்து மக்களுக்காக...







## வேதாகமத்தை எவ்வாறு வாசிப்பது?

## How to read the Bible

-J.C.Choate

**நீ**ங்கள் எப்பொழுதாவது வேதாகமத்தை வாசித்திருக்கிறீர்களா? ஆம், அது ஒரு பெரிய புத்தகம் என்பதை நான் அறிந்திருக்கிறேன், அதை வாசிக்க முயற்சி செய்வதும், அதன் செய்தியை உணர்ந்து கொள்ள முயற்சி செய்வதும் ஆகிய எண்ணம் ஒரு அறை கூவலாக இருக்கிறது. நான் உங்களுக்கு சில தகவல்களையும், செய்திகளையும் அளிக்க விரும்புகிறேன். அது இந்த செய்முறையை தெளிவுபடுத்துவதாக இருக்கும். முதலாவதாக நாம் வேதாகமம் தேவனுடைய அதிகாரத்துடனே பேசி, வேதாகமத்தை வாசித்து அதற்கு கீழ்ப்படிகிறவர்களுடைய வாழ்க்கையை வழி நடத்துவதாக இருக்கிறது என்ற உரிமையை நிலை நிறுத்துவது தேவையான காரியமாய் இருக்கிறது. 2தீமோ.3:16-17, "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" என்று உறுதி கூறுகிறது.

வேதவாக்கியங்களை எழுதியவர்கள், அவைகளை "ஆவியினால் ஏவப்பட்டு" எழுதியதாக உரிமையோடே கூறினார்கள் அடிக்கடி சொல்லப்பட்ட விஷயம் என்னவென்றால், "கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி..." (எசேக்.18:1) என்பது ஆகும். முழு வேதாகமும் ஏறக்குறைய 40 மனுஷர்களால், ஏறத்தாழ 1500 வருஷ காலத்துக்கு மேலாக எழுதப்பட்டதாயிருப்பினும் முதல் புத்தகத்திலிருந்து கடைசி புத்தகம் வரை முரண்பாடுகள் அற்ற இசைவான செய்தியை உடையதாக இருக்கிறது. வேதாகமத்தின் முதல் புத்தகமாகிய ஆதியாகமம், தேவனோடே கூட மனுஷன் பரதீசில் இருந்தது தொடங்கி வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் மனுஷன் அந்த ஐக்கியத்தின் பழைய நிலைமைக்கு கொண்டுவரப்படுவதுடன் நிறைவடைகிறது. வேதாகமத்தின் எழுத்தாளர்கள் எவரும் ஒரே காலத்தில் வசிக்கவில்லை என்ற போதிலும் அவர்களில் பெரும்பாலானவர்கள், மற்றவர்களால் எழுதப்பட்டவைகளை சென்றடையும் வழி இல்லாதவர்களாக இருந்தனர்.

நம் அறிவுறுத்தப் படுகிறோம்: "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் **சத்தியவசனத்தை நிதானமாய் பகுத்துப்** போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2தீமோ.3;15).

**பழைய, புதிய ஏற்பாடுகள்**

வேதாகமத்தை நாம் எவ்வாறு நிதானமாய் பகுத்து பார்க்கிறவர்களாயிருக்கிறோம்? நாம் முதலாவதாக இதில் இரண்டு பெரும் பாகங்கள் இருப்பதைக் காண்கிறோம்: **பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு.** ஒரு "ஏற்பாடு" என்பது ஒரு உயில் அல்லது உடன்படிக்கையாக இருக்கிறது. இந்த காரியத்தில் உடன்படிக்கைகள் தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் இடையே இருக்கிறது.

**பிதாக்களின் காலம்**

உலக வரலாற்றில் இரண்டு பிரதான கால பகுதிகளை உள்ளடக்கிய தனித்தனியே 39 "புத்தகங்களை" கொண்டதாக பழைய ஏற்பாடு இருக்கிறது. முதலாவதாக ஒரு சுருக்கமான சரித்திரம்-பிதாக்களின் காலம்- ஆதியாகமம் புத்தகத்தில் அளிக்கப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் தேவன் தமக்கு உண்மையுள்ளவர்களாயிருந்த குடும்ப பிதாக்களுடனே (முற்பிதாக்கள்) நேராக செயல்படுகிறவராயிருந்தார்.

ஆதி.1;1 சொல்கிறது, "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்று இந்த அதிகாரங்கள், மனுஷன் சிருஷ்டிக்கப்பட்ட விதம், பாவத்திற்குள்ளாக அவன் விழுதல், அவனுடைய உடனடியான பின் சந்ததியார் மற்றும் உலக ஜனங்களுக்குள்ளே கீழ்ப்படியாமையின் வளர்ச்சி ஆகியவற்றை இந்த அதிகாரங்கள் சொல்லுகின்றன.

இப்புத்தகத்தின் 6-8 அதிகாரங்களில் நீதிமானாயிருந்த ஒரு மனுஷன் நோவா என்பவனையும், பூமியின் மேல் வரவிருந்த ஜலப்பிரளயத்தையும், அதற்கு அவனும், அவனுடைய குடும்பமும், சகல மிருக ஜீவன்களுடைய பிரதிநிதித்துவங்களும் இரட்சிக்கப்படும்படியாக, ஒரு பேழையை கட்டும்படியாக தேவன் அவனுக்குச் சொன்ன போதனைகளையும் வாசிக்கிறோம். இன்றைக்கு அவிசுவாசிகள் உலகளாவிய ஜலப்பிரளயத்தைப் பற்றிய குறிப்பு ஒரு கட்டுக்கதையே தவிர வேறொன்றும் இல்லை என்று கூறுவார்கள். இதற்கு நேரிடையான சவாலாக பழங்கால நாகரீகங்களைப் பற்றிய குறிப்புகளில் 200-க்கும்மேற்பட்ட ஜலப்பிரளயத்தை குறித்த குறிப்புகள் உலகம் முழுவதிலும் சிதறி காணப்படுகின்றன. இந்த குறிப்புகளை எழுதியவர்கள், ஒருவர் மற்றவருடைய வரலாறுகளை அடைய வழியில்லாமல் இருந்த போதிலும், அநேகம் வேதாகம குறிப்புகளில் குறிப்பிட்ட விளக்கங்கள் ஒத்துப் போகக்கூடியவைகளா யிருக்கின்றன. ஆதியாகமம் 11-ம் அதிகாரத்திலுள்ள பெரிதான "தேசங்களின் பட்டியல்" உலக மக்களின் சரித்திரங்களால் உறுதிப்படுத்தப்பட்டதாயிருக்கிறது.

**மோசேயின் யுகம்**

ஆதியாகமம் 12-ம் அதிகாரத்தில் தேவன் கல்தேயருடைய பட்டணமாகிய ஊர் என்னும் பட்டணத்தைச் சேர்ந்த ஆபிரகாம் என்ற ஒரு மனுஷனோடு தேவன் செய்த உடன்படிக்கையை நாம் வாசிக்கிறோம். பூமியிலுள்ள சகல தேசங்களும் அவனுடைய சந்ததிகள் வழியாக ஆசீர்வதிக்கப்படும் என்று வாக்குப்பண்ணப்பட்டது (ஆதி.12:3). இஸ்ரவேலர் என்று அழைக்கப்பட்ட அவருடைய ஜனங்கள் வந்தார்கள், அதின் மூலமாக இயேசுகிறிஸ்து பிறந்தார்.

யாத்திராகமம் தொடங்கி பழைய ஏற்பாட்டில் கடைசி புத்தகமாகிய மல்கியா வரை தேவன் ஆபிரகாமின் சந்ததியாருடனே கொண்டிருந்த செயல்பாடுகளை சொல்வது மாத்திரமல்ல, வரப்போகிற வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இரட்சகர் தேவகுமாரன் இயேசுகிறிஸ்துவின் தன்மை குறித்த அநேக தீர்க்க தரிசனங்களை நாம் காண்கிறோம்.

வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டு பகுதி முக்கியமானதாக இருக்கிறது, ஏனென்றால் இது நமக்கு மிக சரியாக தேவன் மனுமக்களோடு 4000 ஆண்டுகளாக கொண்டிருந்த செயல்பாடுகளை வரலாற்று குறிப்பாக நமக்கு அளிக்கிறது; தேவனுடைய தன்மையையும், அவர் தம்முடைய ஜனங்களுக்காக கொண்டிருந்த வாஞ்சைகளையும் நாம் அதிகமாக உணர்ந்து கொள்ள இது உதவியாக இருக்கிறது; மேலும் இந்த தீர்க்கதரிசன வாக்கியங்கள் நிறைவேறுவதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் அவைகளின் நிறைவேற்றத்தையும் நமக்கு அளிக்கிறது. இந்த உண்மைகள் கவனத்துடனே கற்கப்பட்டு வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தையா யிருக்கிறது, நாம் இவ்வுலகத்தில் வாழ்வதற்கும், வரவிருக்கிற உலகத்தில் அழியாமையின் வாக்குத்தத்தத்தையும் அளிக்கிறபடியால் நம்முடைய வழிகாட்டியாயிருக்கிறது என்பதையும் நாம் நம்பமுடியும்.

**கிறிஸ்தவ யுகம்**

வேதவாக்கியங்களுக்கு புதிதாய் இருக்கிறவர்களுக்காக ஆதியாகமத்தின் முதல் 12 அதிகாரங்களை வாசிக்கத் தொடங்குகிறவர்களுக்கு ஒரு அடிப்படையான உணர்ந்து கொள்ளுதல் உண்டாகும்படி ஒரு சூத்திரமாக (ஃபார்முலா) அது இருக்கும், பின்னர்



சிலர் இயேசு ஆவிக்குரிய உணவின் மறைபொருளாக பேசிக்கொண்டிருந்தாரென கருதலாம். உண்மையாகவே, ஜீவனுக்கான அப்பத்தைப் பற்றிய அவருடைய உரையாடல் அவருடைய போதனையின் ஆரம்பத்தில் அந்தப் பொருளைக் கொண்டிருந்தது. இதைப்போலவே யோவான்4:10-14-ல் சொல்லப்பட்ட வார்த்தைகளும் இந்த விவாதத்தில் ஜீவத் தண்ணீரென இயேசு அழைத்த ஆவிக்குரிய போஷாக்கைப்பற்றிய விஷயத்தோடு சம்பந்தப்படுகிறது. இந்த இரு பகுதிகளில் தாமே ஜீவ அப்பமும் ஜீவத்தண்ணீருமாயிருக்கிறாரென சொல்லுவதில் அவர் அவைகளைத் தமக்கு மறைபொருளாக வைத்தார்.

இயேசு தம்முடைய சீஷர்கள் தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம்பண்ணவேண்டுமெனச் சொன்னார்.

ஆனால் இந்த உதாரணத்தில், இயேசு அப்பம் (தண்ணீர் இன்னும் மற்றவை) உருவணியாக வைக்கப்பட்ட இடத்தில் ஆவிக்குரிய உணவைப் பற்றிய கருத்திலிருந்து விலகி சொற்களுக்கு நேரடியான பொருளை உடையதாய் இருக்கக் கூடாததும் பிரத்தியேகமாக சொற்களின் வடிவமாகக் கருதக் கூடாததுமான வசனப் போக்கிற்குத் திரும்பினார். அவர் **தம்முடைய சீஷர்கள் ஜீவனைப் பெற்றிருக்க தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம்பண்ண வேண்டுமென** சொன்னார். ஏனென்றால் கவனித்துக் கேட்கிறவர்கள் புரிந்துகொள்ளமுடியாத இப்பேர்பட்ட **சூசகமான** ஆழமான கூற்றிற்கு மறைபொருளாகவுங்கூட ஒப்பானதொன்றுமில்லை, மேலும் "......அது முதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்" (யோவா.6:66).

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கப்புறம், சிலுவையில் பலியிடப்பட்ட அவருடைய சரீரத்தின் வாராந்திர நினைவுகூருதல்களை இன்றைய உலகில் வாழ்கின்ற விசுவாசிகள் அவருடைய கூற்றினை தோற்றத்தில் கண்டு அவர் சொல்லிய முழுக் கருத்தினையும் சரியாக புரிந்து கொள்ளமுடியும். **அவர் தம்முடைய மரணத்தின் நினைவுகூருதலாகயிருப்பவற்றை தொடங்கவிருக்கும் ஆவிக்குரிய விருந்தைக் குறித்த கருத்தினை அவர் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார்** அந்த நிகழ்ச்சியின் போதும் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இரவிலும் அவர் **பங்கு கொள்ளவிருக்கிற தம்முடைய சரீரத்தைக்குறித்தும் இரத்தத்தைக்** குறித்தும் பேசினார். இந்த ஒத்த சொற்றொடர் நிதானமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவருடைய நாளில் கவனித்துக்கேட்டு இரத்தம் புசிப்பதை அனுமதிக்காத பழைய ஏற்பாட்டு கட்டளைக்கு பழக்கப்பட்டு போனவர்களுக்கு இயேசுவின் கூற்று வெறுப்பூட்டுகின்ற சமயக்கொள்கைக்கு மாறுபட்ட கருத்தாக இருந்திருக்கவேண்டும். அவர் இதை அறிவார் ஆயினும் அந்த பூரணமான அறிவுள்ள சத்தியங்கள் உருவாக்கப்பட அந்த அறிமுகம் அவசியமாயிருந்தது.

**உடன்படிக்கையின் அப்பம்**

அவருடைய சிலுவைப்பாடுகளுக்கு முன்பு அப்பத்தை எடுத்து அவர், "..வாங்கிப்புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது..."(மத்.26:26) என்றார்.

இந்த பாடங்களைக் கற்றுக்கொடுக்கும்படிக்கு, இந்த எண்ணங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக எழுகின்றன:

(1) "இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்" (லூக்.22:19).

(2) "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து..." (1கொரி.11:26).

ஆதி கிறிஸ்தவர்கள் நினைவு விருந்துகளுக்கான இரண்டு எடுத்துக்

பெண்கள் பகுதி



## பண்டிகைகளின் நோக்கம்

## The Purpose of the Feasts

*-Betty*

பஸ்கா பண்டிகை மற்றும் இஸ்ரவேலர் தங்களுடைய பாவங்களுக்காகச் செலுத்த வேண்டியிருந்த மிருகபலி போன்றவற்றின் நோக்கத்தைக் கற்றுக்கொள்ள நாம் வேத வாக்கியங்களை உற்று நோக்கும் வேளையில், அவைகள் எகிப்திலிருந்து தேவனால் பரிசுத்தமடைவதற்கும் மீண்டும் சுட்டிக்காட்டுகின்ற நினைப்பூட்டுகிறவைகள் மாத்திரமல்ல என நாம் உணருகிறோம்; அவைகள் வரப்போகிற பஸ்கா ஆட்டுக்குட்டியையும் இயேசு கிறிஸ்து என்பவரிலுள்ள பாவ-பலியையும் குறித்த தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட விஷயங்களாயிருந்தன. இன்று செய்யப்படுகிறதான கிறிஸ்துவின் மரணத்தின் நினைவு கூருதலாக சபைக்குக் கொடுக்கப்பட்ட அந்த நினைவு விருந்து பழைய ஏற்பாட்டின் விருந்தைப் போன்றதே ஆகும்: இது சிலுவைக்குக் கொண்டு சென்று அவருடைய வருகையை எதிர்நோக்கியிருக்கப்பண்ணுகிறது. "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1கொரி.11:26).

### கர்த்தருடைய பந்தியின் அறிமுகம்

**இந்தப் பந்தியின் ஆரம்பம் என்ன?**

"வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, "பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து; இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்...." (லூக்.22:14-16,19,20).

முன்பதாக, இந்த நினைவு விருந்தைக் குறித்து ஒரு தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட விஷயத்தில், இயேசு இவ்வாறு சொல்லியிருந்தார்:

"நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்...... நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை..... என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்" (யோவா.6:51-54) என்றார்.



அவர்கள் புதிய ஏற்பாட்டை வாசிக்கத் தொடங்கலாம். இந்த பெயரிலிருந்தே இந்த உடன்படிக்கைதான் இன்றைக்கு நடைமுறையில் இருக்கிறது என்ற முடிவை நாம் எடுக்கவேண்டும்.

புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்கள் (மத்தேயு, மாற்கு, லூக்கா, மற்றும் யோவான்: கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை குறித்த நான்கு குறிப்புகள்) பழைய ஏற்பாட்டிலுள்ள இயேசுகிறிஸ்துவின் பிறப்பு, வாழ்க்கை, உபதேசங்கள், மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலை குறித்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல்களை நமக்கு அளிக்கின்றன. 2000 ஆண்டுகளுக்கு முன்பாக ஏழை பெற்றோருக்கு அவர்கள் வசித்து வந்த சிறிய தேசத்திலே பிறந்த மனுஷனாகிய இவர் மிகவும் மோசமான சிலுவை மரணத்தை அடைந்தார். அவருடைய மரணத்துக்கு பின்னே, அதை போன்றதொரு மரணத்தை யாரும் கேள்விப்பட்டிருக்க முடியாது. ஆனால் இன்றோ அவர் உலகத்தையே மேற்கொண்டவராக இருந்து வருகிறார். நாட்காட்டிகளே அவருடைய பிறந்த தேதியில் இருந்து கணக்கிடப்பட்டு வருகின்றன.

விளக்குவதற்கு அரிதான இந்த நபர்: இருந்தவராகவும் இருக்கிறவராகவும் இருக்கிறார். தீர்க்கதரிசனங்கள் அவரைக்குறித்து, "நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் (சங்.2:7; எபி.1:5) என்றும் உரைத்திருந்தன. தேவத்துவத்தில் ஒருவராயிருந்த அவர் "எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது" (எபி.2:17). எனவே மாம்சத்திலே வந்து மனுக்குலத்தை அதன் சிருஷ்டிகரராகிய தேவனிடமிருந்து பிரித்திருந்த பாவங்களுக்காக, பூரணராக்கப்பட்ட, பலியாக மரித்தார் (எபி.2:17).

கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை குறித்து வாசிப்பதை தொடர்ந்து நீங்கள்,அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் அவருடைய ஆவிக்குரிய குடும்பமாகிய கிறிஸ்துவின் சபையை குறித்து நீங்கள் வாசிப்பீர்கள். அவரிடத்தில் விசுவாச முள்ளவர்களாகி தங்களுடைய பாவ வாழ்க்கையை விட்டு திரும்பி அவர் தேவனுடைய குமாரனாயிருக்கிறார் என்ற நம்பிக்கையை அறிக்கையிட்டு கல்லறையில் செய்யப்பட்ட அவருடைய அடக்கத்துக்கு ஒப்பாக தண்ணீருக்குள் அடக்கம் செய்யப்பட்டு ஒரு புதிய ஜீவனுள்ளவர்களாக நடந்து கொள்ளும்படி உயிரோடெழுப்பப்பட்டவர்களாயிருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டின் மீதியான பகுதி சபையின் வளர்ச்சியை குறித்த போதனைகள் மற்றும் கிறிஸ்துவுடனே கூட நடக்கிறவர்களாகிய முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களை குறித்த போதனைகளை கொண்டதாக இருக்கிறது.

வேதாகமத்தின் கடைசி புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷம்

வெளிப்படுத்தின விசேஷத்தின் பெரும்பாலான பகுதி தீர்க்கதரிசனமாக இருக்கிறது. 20-22 அதிகாரங்களில் உள்ள வாக்குத்தத்தம் என்னவென்றால் புதிய வானம், புதியபூமியிலே தேவனோடே கூட வாழும் வகையில் விசுவாசிகளை எடுத்துக் கொள்ளும்படியாக கிறிஸ்து மீண்டும் வருவார் என்பதாகும்.




**சந்தா செலுத்திவிட்டீர்களா?**

The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001

## வேத அறிவுப்போட்டி 236-ன் விடைகள்


1. தீமோத்தேயு - 2தீமோ.1:4
2. சகரியா - சகரி.7:10
3. புத்திசொல்லுங்கள் - எபி.3:13
4. யூதஜனங்கள் - மல்.2:13
5. பெருமையானவைகளை - யாக்.3:5
6. யோசேப்பு - ஆதி.44:12
7. ஆம் - 1பேது.3:7
8. மோசே - யாத்.32:20
9. பவுல்,பேதுரு - 2பேது.3:16
10. ஆம் - லேவி.25:32

### வெற்றிபெற்றவர்கள்

1. A. டேவிட் ஜெயசந்திரன் - மதுரை
2. Mrs. ராணிமூர்த்தி - திருநெல்வேலி
3. Mrs. பாலின்மார்டின் - காரைக்குடி
4. T. இராஜாத்தி - கோம்பை
5. Mrs. ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
6. Mrs. அந்தோனியம்மாள் - தூத்துக்குடி
7. J. விக்டர் சுவிசேஷமுத்து - ஆனந்தபுரம்
8. R. ஜெபக்கனிமார்க்ஸ் - விருதுநகர்
9. E.அதிசயம் - பனைகுடி
10. S. தங்கம் - கன்னியாகுமரி
11. T. ஏஞ்சலின்நேசமலர் - கன்னியாகுமரி
12. Mrs. ஞானம்பிலிப் - கோவை
13. J. ஜாய்கமலம் - நாசரேத்
14. Mrs. ஆலிவ்ஜெபாலன் - கோவை
15. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
16. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
17. Mrs. ரூபிஜெயசேகர் - கலுங்குவிளை
18. Mrs. ஜெனிதர்மராஜ் - திருநெல்வேலி
19. Mrs. ஜெயமணி ராஜம்மாள் - சென்னை
20. Mrs. ஜெபநியூட்டன் - திருநெல்வேலி
21. Mrs. ருக்மணிஜெயசீலன் - தேனி
22. S. ரூசெல்வராஜ் சாலமோன் - திருநெல்வேலி
23. D. அன்புகமலம் - காரைக்குடி
24. E. ஜாய்ஸ் எலன் புனிதா - சென்னை
25. Mrs. ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
26. Mrs. ஜெபராணி ஜெபராஜ் - சென்னை
27. S. ஜாய்சந்திரகாந்தா - நெல்லூர்
28. P. சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
29. Mrs. ரூபவல்யா - நாசரேத்
30. R. ஜெபக்கனிமார்க்ஸ் - கூமாபட்டி
31. M.முருகன் - நாமக்கல்
32. M. ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
33. Sis. கஸ்தூரி - ஒட்டநத்தம்
34. J. மேரிஜெயக்குமார் - மதுரை
35. Mrs. மேரிநிர்மலாஆபிரகாம் - மதுரை
36. Mrs. ரத்னாபாய்பிரசாத் - மதுரை
37. Mrs. ஃபுளோராசுந்தர் - மதுரை
38. Mrs. ஜெபாமோசஸ் - தூத்துக்குடி
39. Mrs. ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி

முடிவிலே
ஒவ்வொருவரும் முழங்கால்படியிடகடவர்
ஒரு அதிபர் முன் அல்ல
எதற்கு முன்பாகவும் அல்ல
ஆனால்
கர்த்தராகிய இயேசுவுக்கு
முன்பாக முழங்கால்படியிடுவர்
இது விவாதமல்ல.

-Betty



## வேத அறிவுப்போட்டி 237-ன் விடைகள்

1. அறிய - 1யோவா.3:1
2. ஆரோன் - எண்.12:11
3. வெளிப்படுத்தல் - வெளி.13:10
4. இரத்தத்தை - உபா.12:24
5. அவனுடைய சீஷர்கள் - மத்.14:12
6. எபூசியரை - யோசு.15:63
7. பாரம்பரியம் - மாற்.7:9-11
8. ஆம் - நியா.2:16
9. மோசே,எலியா - லூக்.9:30,31
10. சாமுவேல் - 1சாமு.12:18

### வெற்றிபெற்றவர்கள்

1. Mrs. நவரத்தினம் ஞானராஜ் - நாசரேத்
2. Mrs. ராணிமூர்த்தி - திருநெல்வேலி
3. Mrs. ஜெனிதர்மராஜ் - திருநெல்வேலி
4. M. ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
5. Sis. கஸ்தூரி - ஒட்டநத்தம்
6. R. ஞானசிரோன்மணி - மதுரை
7. P. சந்திராடேனியல் - நஞ்சான்குளம்
8. Mrs. அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
9. Mrs. ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
10. Mrs. கிறிஸ்டோபல்சாலமோன் - கோவை
11. A. ஜெயச்சந்திரன் - மதுரை
12. S. ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
13. D. தேவபுஸ்பம் - நாசரேத்
14. Mrs. ஜெயமணி ராஜம்மாள் - கடலூர்
15. T. இராஜாத்தி - கோம்பை
16. J. மேரிஜெயக்குமாரி - மதுரை
17. Mrs. ரூபிஜெயசேகர் - கலுங்குவிளை
18. J. விக்டர் சுவிசேஷமுத்து - ஆனந்தபுரம்
19. Mrs. ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
20. Mrs. மேரிநிர்மலாஆபிரகாம் - மதுரை
21. Mrs. கெத்சிசெல்வின் - சென்னை
22. Mrs. ரத்னாபாய்பிரசாத் - மதுரை
23. Mrs. ஃபுளோராசுந்தர் - மதுரை
24. Mrs. ஆலிவ்ஜெயபாலன் - கோவை
25. S. அதிசயம் - பனைகுடி
26. Mrs. ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
27. Mrs. பாலின்டேனியல் - சென்னை
28. Mrs. ஜெபாமேசஸ் - மதுரை
29. S. தங்கம் - கன்னியாகுமரி
30. T. ஏஞ்சலின்நேசமலர் - கன்னியாகுமரி
31. Mrs. சாந்தாபழனி - தருமபுரி
32. Mrs. ஞானம்பிலிப் - கோவை
33. S. சாந்தகுமாரி - நாசரேத்
34. Mrs.ஜெயராணிஅன்புராஜ் - திருநெல்வேலி
35. Mrs. அன்புக்கமலம் - காரைக்குடி
36. J. ஷீபாராணி - கடலூர்
37. Mrs. உஷா சாம் - தூத்துக்குடி
38. J. பிச்சை - விருதுநகர்
39. Mrs. ஜெபாமோசஸ் - தூத்துக்குடி
40. Mrs. இளவரசி ஜோபிதா - கோவை
41. J.S. ஜெயாமேரிதாய் - திண்டுக்கல்
42. Mrs. ஜாய்ஹெலன்புனிதா - சென்னை
43. S.V. தனபால் - கொடுமுடி
44. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
45. Mrs. ஜெபராணி ஜெபராஜ் - சென்னை
46. M.முருகன் - நாமக்கல்
47. Mrs.ஜோதிமணிஅப்பாத்துரை - மதுரை
48. Mrs. ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி
49. Mrs. ருக்மணிஜெயசீலன் - தேனி

வேதஅறிவுப்போட்டியில் கலந்துகொண்ட
அனைவருக்கும் வாழ்த்துக்கள்
சிலர் வாட்ஸ்ஆப் மூலம் பதில் அனுப்பியிருந்தீர்கள்
கர்த்தர் உங்களுடைய முயற்சியை ஆசீர்வதிப்பாராக!



**வேதகம கேள்விகள்**

வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்
ஆம் எனில் ☑ குறியிடவும்



**தற்சோதனை பகுதி - 22**

### 22. உயிர்த்தெழுதல் நடக்குமா?

1. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் ☐ வசன ஆதாரம் ----------------------------------------
2. அழிவுள்ளது அழிவில்லாததாய் எழுந்திருக்காது ☐ வசன ஆதாரம் ----------------------------------------
3. கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் ☐ வசன ஆதாரம் ----------------------------------------
4. சாவுக்கேதுவான சரீரம் செத்துப்போகும் ☐ வசன ஆதாரம் ---------
5. பரிசேயர்கள் உயிர்த்தெழுதலை நம்பினார்கள் ☐ வசன ஆதாரம் -------
6. சதுசேயரும் உயிர்த்தெழுதலை நம்பினார்கள் ☐ வசன ஆதாரம்--------
7. மரித்தோர் உயிர்தெழாவிட்டால், புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே? ☐ வசன ஆதாரம்------------------
8. உயிர்த்தெழுதலில் கொள்வனையும் கொடுப்பனையும் இருக்கும் ☐ வசன ஆதாரம் ----------------------------------------
9. இயேசு: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்றார் ☐ வசன ஆதாரம்- ----------------------------------------
10. கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள் என்று சொல்லப்படவில்லை ☐ வசன ஆதாரம் --------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW** Contact Us: 94435 58041

வேண்டும். மேலும் ஒவ்வொருவரும் தான் எதற்கு பொறுப்பானவர் என்பதையும் தான் எதை செய்யாதிருக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். வழிநடத்துகிறவர்கள் பின்பற்றுகிறவர்களின் ஸ்தானத்தை பாராட்ட வேண்டும். பின்பற்றுகிறவர்கள் வழிநடத்துனர்களின் வேலையை மதிக்க வேண்டும். இது எல்லார் மத்தியிலும் ஒரு நல்ல உறவை கொண்டுவரும்.

வேதாகமம் சபையின் அமைப்பை ஒரு மனித சரீரத்திற்கு ஒப்பிடுகிறது. சரீரத்தின் அவயவங்கள் அநேகமாயிருந்தாலும், சகல அவயவங்களும் முழுசரீரத்துக்கும் அவசியமாயிருக்கிறது (1கொரி.12:12). கால் தான் முக்கியமானது அல்ல என்று எண்ண வேண்டாம். அது தான் கையாய் இராததினாலே (வச.15) கண்ணானது கையைப் பார்த்து, அது தனக்கு வேண்டாம் என்று சொல்ல வேண்டாம். சரீரத்திலே சிறிய அவயவங்களும் அவசியம் ஆனதும், முக்கியமானவைகளுமாய் இருக்கின்றன (வச.20-26). இவை அனைத்து காரியங்களும், கிறிஸ்துவின் மெய்யான ஆவிக்குரிய சரீரத்தைப் போன்று (சபை) இருக்கின்றன. தலைவர்களுக்கும், பின் பற்றுகிறவர்களுக்கும் இடையே பொறாமை இருக்க வேண்டாம். எல்லா அங்கத்தினர்களும் நல்ல வேலைகளை ஒன்று சேர்ந்து செய்வதன் மூலம், ஒவ்வொரு பணியும் செய்யக்கூடியதாயிருக்கும். இந்தப் புத்தகத்தின் பிரதியானது வழிநடத்துதல், பின்பற்றுதல் மற்றும் ஒன்றாக ஒத்துழைப்பதை குறித்த ஒரு பாடமாகயிருக்கும்.

### கேள்விகள்

1. மத்.9:36 திரளான ஜனங்கள் ----------- போன்றவர்களும் மேய்ப்பனில்லாமல்-------------- இருந்தார்கள் என்று சொல்லுகிறது.
2. எபேசி.5:23 புருஷன்------------- தலையாயிருக்கிறான் என்று சொல்லுகிறது.
3. 1பேதுரு 2:13-14 -------------------- கட்டளைகளுக்கும் ------------------ --------------- கீழ்ப்படியுங்கள் என்று சொல்லுகிறது.
4. மத்.12:25 தனக்கு------- ------ எந்த வீடும் ------ என்று சொல்லுகிறது.
5. 1கொரிந்.12ம் அதிகாரத்தில் சபை அங்கத்தினர்கள் ---------- சரீரத்தின் --------- ஒத்திருக்கிறார்கள்.
6. தொழிலாளர்களுக்கு வழிநடத்துதல் தேவைப்படுகிறதா?
7. பின்பற்றுதல் என்பது சபையில் மிக முக்கிமான காரியமாயிருக்கிறதா? -------------
8. ஒன்று சேர்ந்து பணியாற்றுவதை எந்த வார்த்தை குறிப்பிடுகிறது? --------------
9. சிறிய அவயவங்கள் சரீரத்திற்கு முக்கியம் இல்லாதவைகளாய் இருக்கின்றனவா? -----
10. கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமானது என்ன?

### பொது அறிவு சோதனை

1. ஆபிரகாம் லிங்கன் செய்த சீர்திருத்தம் எது?
அ) நிலசீர்திருத்தம் ஆ) நிறவெறி ஒழிப்பு இ) அடிமைத்தன ஒழிப்பு
2. மின்சார சக்தியை சேமிக்கப் பயன்படுவது எது?
அ)எலக்ட்ரோ மீட்டர் ஆ) அக்யூமுலேட்டர் இ) அம்மீட்டர்
3. இரும்புச் சத்து குறைவால் வரும் நோய் எது?
அ) அனிமியா ஆ) காய்ட்டர் இ) ஸ்கர்வி
4. சில பிராணிகள் செயலற்றிருத்தல் எந்த காலத்தில் நடைபெறும்?
அ) கேடைகாலம் ஆ) வேனிற்காலம் இ) குளிர்காலம்
5. விமான நிலையத்திற்கு அருகில் வசிப்பவர்களுக்கு எந்த வகையான சுகாதார கேடு விளைகிறது?
அ) கதிரியக்கம் ஆ) சப்தம் இ) காற்று

**விடைகள்:**
1. அடிமைத்தன ஒழிப்பு
2. அக்யூமுலேட்டர்
3. அனிமியா
4. குளிர்காலம்
5. சப்தம்



**நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்**
Evangelizing Our Friends

**மதிப்பீடு மற்றும் கேள்விகளும் பதில்களும்**
Review and Questions and Answers
**பாடம் -13**
*-Kevin Cauley*



**மனப்பாட வசனம்:**
**(மாற்கு 16:15-16 NKJV) "பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்**

**முன்னுரை:**

கடந்த மூன்று மாதங்களாக நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தலை கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய அன்போடுகூட பிரகாசிக்கிறது போல நம்முடைய வெளிச்சம் பிரகாசிப்பதன் மூலம் அறிவித்திருக்கிறோம். வகுப்பில் நாம் விவாதித்த ஏதேனும் சிலகாரியங்களை அப்பியாசப்படுத்தியிருக்கிறீர்களா? அப்படியிருக்குமானால் உங்களுடைய அநுபவம் எதைப் போல இருக்கிறது? நீங்கள் உங்களுடைய நண்பர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க முயற்சிக்க வில்லையென்றாலும் கூட, உங்களுடைய விசுவாசம் வளர்ந்திருக்கிறது இப்பாடப்பகுதிகளைப் படித்திருப்பது உங்களுக்கு எவ்விதத்தில் உதவிசெய்கின்றது? நாம் இணைந்து தேவனுடைய வார்த்தையைப் படிக்கும்போது நாம் அநேக நன்மைகளைப் பெறுகிறோம். மேலும் அவருடைய செய்தியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள நாம் நம்மை ஞானத்தோடு ஆயத்தம் செய்யும்போது, நாம் அதிக நன்மையடைகிறோம். இச்செய்தியைப் பகிர்ந்துகொள்ள ஆயத்தமுள்ளோர் யாவரும் தாங்கள் யாருடன் பகிர்ந்து கொள்கின்றனரோ அதைவிட தங்களுடைய ஆயத்தத்தின் மூலம் அதிகம் கற்றுக்கொள்கின்றனர்.

**வேதாகமம் என்ன சொல்லுகிறது?**

கடந்த மூன்று மாத காலங்களாக அநேக வேறுபட்ட காரியங்களை நாம் பார்த்திருக்கிறோம். நீங்கள் மனப்பாடம் செய்திருக்கிற வசனங்களை உள்ளடக்கிய ஒவ்வொரு பாடப்பகுதியையும் காண்பிக்கிற கையடக்கமான தரவரிசைப் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

உங்கள் ஆசிரியரோடு கூட இப்பாடப்பகுதிகளை மீளாய்வு செய்து நீங்கள் இவற்றிலிருந்து கற்றுக் கொண்டவற்றைக் குறித்துப் பேசுங்கள். மற்றவைகளுக்கு மேலாக முக்கியமானவைகளாக உங்கள் மனதில் நின்ற ஏதேனும் குறிப்புகள் உள்ளனவா? இந்தப் பாடப்பகுதிகளைக் கற்றுக்கொள்கையில் ஒரு கிறிஸ்தவனாக உங்களுடைய வளர்ச்சியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வேதவாக்கியங்கள் எவை?

| பாடம் எண் | தலைப்பு | மனப்பாடவசனம் |
|---|---|---|
| பாடம் 1 | தேவன் நம் நண்பர்களிடம் பேசுகிறார் | எபி.1:1,2 |
| பாடம் 2 | தேவனுக்கும் நம் நண்பர்களுக்குமிடையே ஓர் பிரச்சனை உள்ளது | ஏசா.59:1,1 |
| பாடம் 3 | நமது நண்பர்களுக்கான ஒரே செய்தி இயேசு | அப்.4:12 |

| | | |
|---|---|---|
| பாடம் 4 | நீங்கள் உங்கள் நண்பர்களுக்கு தேவனுடைய பாலமாக இருக்கிறீர்கள் | 1தீமோ.3:15 |
| பாடம் 5 | தேவனை அறிவதற்கு சரியான ஆயத்தம் உன் நண்பர்களுக்கு உதவுகிறது | 1பேது.3:15 |
| பாடம் 6 | கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தல் - நீங்கள் எவ்விடத்தில் இருந்தும் - உங்கள் நண்பர்களுக்கு உதவுகிறீர்கள் | 1கொரி.10:31 |
| பாடம் 7 | ஒரு நல்ல மாதிரியாக இருத்தல் உன் நண்பர்களுக்கு உதவுகிறது | மத்.5:16 |
| பாடம் 8 | உங்கள் நண்பர்களுடன் அன்பு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் | 1யோவா.4:16 |
| பாடம் 9 | சபையோடு இணையச் செய்தல் உங்கள் நண்பர்களுக்கு உதவுகிறது | அப்.2:44 |
| பாடம் 10 | ஊழிய பிரயாணம் செல்லுதல் உங்கள் நண்பர்களுக்கு உதவுகிறது | அப்.1:8 |
| பாடம் 11 | எஞ்சியுள்ள ஆவிக்குரியவை உங்கள் நண்பர்களுக்கு உதவுகிறது | கலாத்.5:16 |
| பாடம் 12 | தேவனைக் குறித்து உன்னுடைய நண்பர்களிடம் நீ எவ்வாறு பேசுகிறாய்? | யோவா.14:15 |

**எவ்வாறு இதைப் பிரயோகிக்கிறோம்?**


நீங்கள் தனிப்பட்ட விதத்தில் உங்கள் நண்பர்களுக்கு சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள என்ன செய்வீர்கள்? நாம் இப்பாடங்களில் கற்றுக் கொண்ட விஷயங்களை உட்கிரகித்து நம்முடைய வாழ்வில் அவைகளை மிகநெருக்கமான தனிப்பட்ட வழியில் பிரயோகிக்கவும் இதுவே நேரமாயிருக்கிறது. இயேசு தம்முடைய இரட்சிப்பின் செய்தியை மற்றவர்களுக்கு போதிக்கும்படி நம்மை எதிர்பார்க்கிறார், மேலும் நீங்கள் அதைச் செய்யும்படி இப்போதே அந்த பெரிய வாய்ப்பினைப் பெற்றுள்ளீர்கள். உங்கள் வாழ்வில் உங்களுடைய நண்பர்கள் மத்தியில் இக்காரியங்களைச் செய்கையில் ஏற்படும் தாக்கத்தைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? நீங்கள் இவற்றினை எப்படி செய்வீர்கள் என்று பிரதிபலிக்க சில குறிப்புகளை எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் நண்பர்களுக்கு சுவிசேஷத் தைரை அறிவிப்பதற்கான திட்டங்களைக் குறித்து உங்கள் ஆசிரியரிடம் பேசி அதன்பின் இச்செயல் முன்னோக்கிச் செல்வதற்கான ஆலோசனைகளைக் குறித்து வகுப்பு அங்கத்தினரிடத்தில் நெருங்கிச் சென்று தொடர் வகுப்புகளில் நீங்கள் பெற்றுள்ள அநுபவங்களைப் பகிர்ந்து கொள்கையில் உங்களுடைய நிறைவுறுதலானது போதிப்பதற்கான சக்திவாய்ந்த அணுகுமுறையைப் பற்றியதாக இருக்கும்.

**எல்லாவற்றிற்கும் மேலாக:** உங்களுடைய நண்பர்களோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுவதற்குத் தாமதம் பண்ணாதீர்கள் தேவன் தம்முடைய குமாரனின் மரணத்தின் மூலமாக அவர்களிடம் காட்டும் அன்பிற்கு அவர்களது ஓர் இணைப்பாக நீங்கள் காணப்படுவீர்கள்.

**தொடர்புடைய இவ்வேத வாக்கியங்களைப்படித்து விவாதியுங்கள்:**

ஏசா.59:1,2, மத்.5:16, மாற்.16:15,16, யோவா.14:15, அப்.1:8,2:44,4:12, 1கொரி.10:31, கலா.5:16, 1தீமோ.3:15, எபி.1:1,2, 1பேது.3:15, 1யோவா.4:16.






## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்

**பாடம் -3**

**சபையின் அமைப்பைக் குறித்த ஆரம்ப உண்மைகள்**

1. ஒவ்வொரு அமைப்பும் வழிநடத்துனர்களை கொண்டிருக்கவேண்டும்
2. ஒவ்வொரு அமைப்பும் பின்பற்றுகிறவர்களை உடையதாய் இருக்க வேண்டும்.
3. ஒவ்வொரு குழுவும் மற்ற குழுவுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

**கலந்துரையாடல்**

1. ஒவ்வொரு அமைப்பும் வழிநடத்துனர்களை கொண்டிருக்க வேண்டும். இயேசு அடிக்கடி தம்மை பின்பற்றுகிற திரளான ஜனங்களிடத்தில் மன உருக்கம் கொண்டவராய் இருந்தார் ஏனென்றால் அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலிருந்தார்கள் (மத்.9:36). செம்மறியாட்டைப்போன்ற பிராணிகள் கூட்டம் தங்களுக்கு தலைமை உடையவைகளாக இருக்க வேண்டும். இந்த காரியம் மனித குழுக்களிலும் உண்மையானதாயிருக்கிறது. தேவன் குடும்பத்திற்கு ஒரு தலைமை வேண்டும் என்பதை கண்டார், ஆகையால் அவர் புருஷனை தலையாக்கினார் (எபே.5:23). தேசங்களுக்கு ஆளுகை செய்கிறவர்கள் இருக்க வேண்டும். தேவன் இராஜாக்களையும், ஆளுகை செய்கிறவர்களையும் நியமித்திருக்கிறார் (1பேது.2:13,14). தொழிலாளர்களின் குழுக்களுக்கு நல்ல தலைவர்கள் இருப்பார்களேயாகில், அவர்கள் அதிகமேன்மையாக தங்கள் தொழிலை செய்ய முடியும். சபையிலே வழிநடத்துகிறவர்களைக் குறித்த தேவனுடைய திட்டம் நியாயமானது என்பதை இந்த காரியங்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு அமைப்புக்கும் வழிநடத்துகிறவர்கள் என்பது அவசியமானதாயிருக்கிறது.

2. ஒவ்வொரு அமைப்பும் பின்பற்றுகிறவர்களை உடையதாய் இருக்க வேண்டும். தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப்பட்டணமும், எந்த வீடும் நிலை நிற்க மாட்டாது (மத்.12:25). நல்ல தலைவர்களுடனே கூட, ஒவ்வொரு குளுவும் சிறந்த பின்பற்றுகிறவர்களை உடையதாய் இருக்க வேண்டும். ஒரு அமைப்பின் வழி நடத்துதல் முன்னேற்றம் அடைவதற்கு பின்பற்றுதல் என்பது அத்தியாவசியமானதாக இருக்கிறது. எப்படி ஆயினும் மனிதர்கள், பின்பற்றுகிறவர்களை குறித்து மிக முக்கியமானவர்களாக சிந்திக்கிறதில்லை. ஆனால் வழிநடத்துகிறவர்கள் என்ன நன்மை உடையவர்களாக இருக்கிறார்கள்? பின்பற்றுகிறவர்கள் எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்பதை பயிற்றுவிக்க வேண்டியது அவசியமானதாயிருக்கிறது. பின்பற்றுகிறவர்கள் நன்றாகப் பின்பற்றுகிறவர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கின்றார். அவர்கள் எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்று போதிக்கப்பட வேண்டியது அவசியமாக இருக்கிறது.

3. ஒவ்வொரு குளுவும் மற்ற குழுவுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். நல்ல வழிநடத்துனர்களும் நன்றாகப் பின்பற்றுகிறவர்களும் ஒருவருக்கொருவர் எவ்வாறு நல்வகையில் பணியாற்றுவது என்பதை அறிந்திருக்கிறார்கள். வழிநடத்துகிறவர்களும், பின்பற்றுகிறவர்களும் தங்கள் வேலையை நன்கு அறிந்திருக்க